Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Name | :Marudhasalam |
| Father's Name | :Govindaraj |
| Village | :Navapatti |
| Taluk | :Mettur |
| Caste | :Vanniyar |
| Calling | :- |
| Religion | :Hindu |
| Age | :33 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.06.2026.

MCOP.No.96/2022 CW1 Name:மருதாசலம்

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். சத்தியா பிரகாஷ் த/பெ. பெருமாளுக்கு கதவு எண். 23/16 துரைசாமி நகர் நாட்றம்பள்ளி திருப்பத்தூரில் உள்ள வழங்கபட்ட ஓட்டுநர் உரிமம் எண். TN83 Z20190004746 என்ற உரிமத்தை கொண்டு அசோக் லைலேண்ட் டிஎன் 25பிஎஸ் 1272 என்ற வாகனத்தை ஓட்டுவதற்கு தகுதி உள்ளதா என்றால் டிஎன் 25 பிஎஸ் 1272 அசோக் லைலான் வாகனத்திற்கு போக்குவரத்து வாகனத்திற்கான பர்மீடு வழங்கபட்டுள்ளது. சத்தியாபிரகாஷ்க்கு போக்குவரத்து அல்லாத வாகனம் ஓட்டுவதற்கு மட்டும் உரிமம்

வழங்கபட்டதால் அவரால் இந்த வாகனம் ஓட்டமுடியாது. டிஎன் 25 பிஎஸ் 1272 அசோக் லைலேண்ட் வாகனம் கனரக வாகனம் ஆகும். இந்த வாகனத்தை ஓட்டுவதற்கு போக்குவரத்து கனரக வாகனத்திற்கான உரிமம் பெற்றிருக்கவேண்டும். வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய அறிக்கை தாக்கல் செய்யபடுகிறது. அது நீதிமன்ற ஆவணம் C1 வரிசை (2).

<u>குறுக்கு விசாரணை</u>

நான் மேலேகுறிப்பிட்ட டிஎன் 25 பிஎஸ் 1272 அசோக் லைலேண்ட் வாகனமானது அசோக் லைலேண்ட் (Dost RLS) என்றால் சரி. இந்த வாகனத்தின் Unladen weight எவ்வளவு என்றால் 2560. எனக்கு சம்மன் அனுப்பும்போது அந்த வாகனத்தின் உரிமம் குறித்து விவரங்கள் மட்டும்தான் கேட்டார்கள் வாகனத்தின் விவரம் எதுவும் கேட்கவில்லை. வாகனத்தின் பற்றிய முழுவிவரம் பற்றிய விவரம் தெரிந்தால் மட்டும் அந்த வாகனத்தை மேலேகுறிப்பிட்ட உரிமத்தை வைத்து ஓட்டமுடியுமா முடியாதா என்று கூறமுடியும் என்றால் சரி. என்னிடம் காட்டபடும் ம.சாஆ.4ல் மேலேசொன்ன ஆவணத்தின் Unladen weight 2590 என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரி. அதே சமயத்தில் அது இளகுரக வாகனம் என்று குறிப்பிடபட்டுள்ளது. LMV உரிமம் வைத்திருக்க கூடிய ஒருவர் 7500 கிலோ எடை குறைவாக வாகனத்தை ஓட்டுவதற்கு பேச் தேவையில்லை என்றால் சரி. ஆகவே மேலேச்சொன்ன சத்தியபிரகாஷ் டிஎன் 25 பிஎஸ் 1272 அசோக் லைலேண்ட் வாகனத்தை ஓட்டுவதற்கு அவருக்கு பேச் தேவையில்லை என்றால் சரி.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 03/06/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

K S KAYALVIZHI

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by K S KAYALVIZHI
Location: THIRUPATHUR
Date: 2026.06.03 14:44:29 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.